இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 160 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 07 – திங்கள்கிழமை 20 ஜனவரி 2025 – மதுரை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 160 : Thiruvalluvar Year - 2056 - Thai 07 - Monday 20 January 2025 - Madurai 10 Pages ₹ 5.00




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.1.2025) சென்னையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக சட்டத்துறை மூன்றாவது மாநில மாநாட்டில் கலந்து கொண்டு, சிறப்புரையாற்றினார். இம்மாநாட்டில், கழக பொருளாளர் – மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, கழக துணைப் பொதுச் செயலாளர் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, திருச்சி சிவா எம்.பி., கழக சட்டத்துறை தலைவர் மூத்த வழக்கறிஞர் ஆர்.விடுதலை, கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி., மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி., மூத்த வழக்கறிஞர் ஆர்.சண்முகசுந்தரம், தலைமைக் கழக நிர்வாகிகள், கழக சட்டத்துறை நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (18.1.2025) சென்னையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக சட்டத்துறை மூன்றாவது மாநில மாநாட்டில், கழக சட்டத்துறை சார்பில் தேர்தல் நிதியாக 25 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை கழக சட்டத்துறை தலைவரும் மூத்த வழக்கறிஞருமான ஆர்.விடுதலை, கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. மற்றும் நிர்வாகிகள் வழங்கினார்கள். இம்மாநாட்டில், கழக பொருளாளர் – மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக துணைப் பொதுச் செயலாளர் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, சட்டத்துறை அமைச்சர் எஸ். இரகுபதி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, நாடாளுமன்ற உறுப்பினரும் மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன், மூத்த வழக்கறிஞர் சண்முகசுந்தரம், தலைமைக் கழக நிர்வாகிகள், கழக சட்டத்துறை நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மீண்டும் அமைய – இந்தியா முழுமைக்கும் திராவிடக் கோட்பாடுகளை வென்றெடுக்க

# கழக சட்டத்துறை சளைக்காமல் - சமரசம் இல்லாமல் உழைக்க வேண்டும்!

## தி.மு.க. சட்டத்துறையின் 3வது மாநில மாநாட்டில் – கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!

**சென்னை, ஜன. 20 -**

**சென்னையில் நடந்த தி.மு.கழகச் சட்டத்துறையின் 3-வது மாநில மாநாட்டில் கலந்துகொண்டு - மாநாட்டின் நிறைவாக எழுச்சிப் பேருரையாற்றிய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "2026 தேர்தல் வெற்றி என்பது, நம்முடைய திராவிட மாடல் ஆட்சிக்கு, மக்கள் அளிக்கப் போகும் மகத்தான அங்கீகாரமாக அமையப் போகிறது! திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மீண்டும் அமைய இந்தியா முழுமைக்கும் திராவிடக் கோட்பாடுகளை வென்றெடுக்க கழகச் சட்டத்துறை சளைக்காமல் சமரசம் இல்லாமல் உழைக்க வேண்டும்!" என்று குறிப்பிட்டார்.**

சென்னையில் நடந்த தி.மு.கழகச் சட்டத்துறையின் மூன்றாவது மாநில மாநாட்டில் கலந்துகொண்டு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

தமிழ்நாட்டையும் தமிழ்மொழியையும் தமிழினத்தையும் காக்கும் காவல் அரணாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாங்கிப் பிடிக்க தூணாகத் தூக்கி நிறுத்த எத்தனையோ சார்பு அணிகள் இருக்கிறது! அதில் தனித்துவமானது நம்முடைய சட்டத்துறை! இது, வழக்கறிஞர்கள் அணி மட்டுமல்ல; கழகத்தைக் காக்கும் காவல் அணி!

**கற்கோட்டையாம் கழகத்தின் வெற்றிக்குச் சொந்தக்காரர்கள்!**

சோதனை நெருப்பாறுகள் பல கடந்து அள்ளிவீசப்பட்ட அவதூறுகளை எதிர்கொண்டு நாள்தோறும் கட்டமைக்கப்படும் பொய்களைத் தகர்த்தெறிந்து 75 ஆண்டுகளாகக் கற்கோட்டையாகக் கழகம் நிமிர்ந்து நிற்கிறது; ஆறாவது முறை ஆட்சியமைத்து இருக்கிறது என்றால், அதற்கு லட்சக்கணக்கான கழக வீரர்ககளின் தியாகம்தான் காரணம்! அந்தத் தியாகங்களுக்கு துணை நின்ற வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் தான் சட்டத்துறையைச் சார்ந்த நமது வழக்கறிஞர்கள்!

அப்படிப்பட்ட உங்களை ஒருங்கிணைத்து, இந்த மாநாட்டை நம்முடைய என்.ஆர்.இளங்கோ அவர்கள் மிகச் சிறப்பாக அறிவுப்பூர்வமாக ஆக்கப்பூர்வமாக ஏற்பாடு செய்திருக்கிறார். நீதி மன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் தன்னுடைய வாதத் திறமையால் அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பவர் அவர்! அமைதியான வகையில் ஆக்கப் பணிகளை செய்வது தான் அவருடைய ஸ்டைல்!



**இந்த மாநாட்டை நம்முடைய என்.ஆர்.இளங்கோ அவர்கள் மிகச் சிறப்பாக அறிவுப்பூர்வமாக - ஆக்கப்பூர்வமாக ஏற்பாடு செய்திருக்கிறார். நீதிமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் தன்னுடைய வாதத் திறமையால் அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பவர் அவர்! அமைதியான வகையில் ஆக்கப் பணிகளை செய்வதுதான் அவருடைய ஸ்டைல்! அவருக்குத் துணை நின்று செயலாற்றும் - கழகச் சட்டத்துறையின் தலைவர் - இணைச் செயலாளர்கள் - துணைச் செயலாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பாராட்டுகள்!**

அவருக்குத் துணை நின்று செயலாற்றும் - கழகச் சட்டத்துறையின் தலைவர் - இணைச் செயலாளர்கள் - துணைச் செயலாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பாராட்டுகள்!

**அண்ணா காலம் தொட்டு - கழக சட்டத்துறையின் பங்களிப்பு!**

இந்தத் தமிழ்ச் சமுதாயத்தைப் பண்படுத்தும் சீர்திருத்தும் முற்போக்குக் கருத்துகளை மேடை தோறும் முழங்கிய கழகச் செயல்வீரர்கள் மீது பாய்ந்த வழக்குகளை எல்லாம், சுக்குநூறாகத் தகர்த்தெறிந்த சட்டப்போராளிகள் நீங்கள்! கழகம் தொடங்கப்பட்டு வளர்ந்து வந்த காலத்தில், தொண்டர்கள் மீதான அடக்குமுறைகளை எதிர்கொள்ள, சென்னையில் இருந்து வழக்கறிஞர்களைத் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைப்பார் பேரறிஞர் அண்ணா. அப்படி அவர்கள் நடத்திய சட்டப் போராட்டங்களும் பெற்ற வெற்றிகளும் 1966ஆம் ஆண்டு மதுரையில் நடந்த தி.மு.க. வழக்கறிஞர்கள் மாநாட்டுக்குக் காரணமானது!

பேரறிஞர் அண்ணா காலத்தில் வழக்கறிஞர் குழுவாக இருந்ததை, தலைவர் கலைஞர் சட்டத்துறையாக வளர்த்தெடுத்தார்! கழகத்துக்காகப் போராடிய ஒவ்வொரு கழக முன்னோடியைக் கேட்டாலும், சட்டத்துறையின் பங்களிப்பைப் பற்றிச் சொல்வார்கள்!

1975இல் எமர்ஜென்சி அறிவிக்கப்பட்ட போது, நான் உட்பட பலரும் ஓராண்டு காலம் சிறையில் அடைக்கப்பட்டோம்! வெளியில் இருந்த கழகத் தோழர்கள் பலரும் பல்வேறு வழக்குகளை எதிர்கொண்டார்கள்! அவர்கள் அனைவரையும் பாதுகாத்தது சட்டத்துறைதான்!

எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் தலைவர் கலைஞர் மேல் ஏராளமான வழக்குகளைப் போட்டார்கள்! அப்போது கலைஞருக்காக வாதாட பெரும் படையே வரும். நம்முடைய ஆர்.எஸ்.பாரதியைக் கேட்டால், அந்த வரலாற்றையெல்லாம் விரிவாகச் சொல்வார்.

**காழ்ப்புணர்ச்சியோடு போடப்பட்ட வழக்குகளை எதிர்கொள்ளத் துணை நின்றவர்கள்!**

கழகம் எதிர்க்கட்சியாக இருக்கும் போதெல்லாம், மக்களுக்கான போராட்டங்களை நடத்தி, ஏராளமான வழக்குகளைச் சந்தித்திருக்கிறோம்... கடந்த கால அ.தி.மு.க. ஆட்சிகளில் காழ்ப்புணர்ச்சியோடு புனையப்பட்ட ஏராளமான பொய் வழக்குகளை எதிர் கொண்டிருக்கிறோம். அப்போதெல்லாம் துணையாக நின்ற அமைப்புதான், இந்தச் சட்டத்துறை!

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## நாளை 21 மற்றும் 22 தேதிகளில் ஆய்வு:

# சிவகங்கையில் 50 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்புரை!

**சிவகங்கை, ஜன. 20 -**

**தமிழ்நாடு முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜன. 21, 22 ஆகிய தேதிகளில் சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து அரசு மற்றும் கட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளார்.**

**தமிழ் வளர்நூலகம், அய்யன் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா மற்றும் கழக நிர்வாகிகளுடன் சந்திப்பு மற்றும் 50 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.**

முதலமைச்சர் சுற்றுப்பயண நிகழ்ச்சி விவரம் வருமாறு:-

நாளை (ஜன.21 - செவ்வாய்க்கிழமை) காலை சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சிக்கு வருகை தருகிறார். திருச்சியில் இருந்து கார் மூலம் காரைக்குடி செல்லும் முதலமைச்சர் காலை 11:15 மணியளவில் அழகப்பா பல்கலைக்கழகத்தில் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் குடும்பத்தினரால் கட்டப்பட்டுள்ள திருமதி லட்சுமி வளர் தமிழ் நூலகத்தினை திறந்து வைத்து பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கிறார். இந்த வளர் தமிழ் நூலகத்தில் முழுவதுமாக தமிழ் நூல்கள், ஆராய்ச்சி வரலாற்று நூல்கள், பல்வேறு தமிழறிஞர்கள் எழுதிய நூல்கள் மற்றும் குறிப்புகள் வைக்கப்பட்டுள்ளது. இது தவிர நூலகத்தில் படிப்பதற்கான அறைகளும் அழகான முறையில் கட்டப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் நூலகம் குறித்த நோக்க உரையாற்றுகிறார். கவிப்பேரரசு வைரமுத்து உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள். அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், எஸ்.ரகுபதி, ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், தங்கம் தென்னரசு, மு.பெ.சாமிநாதன், சிவ.வீ.மெய்யநாதன், கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி., எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்திப் பேசுகிறார்கள். மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் முன்னிலை வகிக்கிறார். அதை தொடர்ந்து பல்கலைக்கழக முன்புறம் கட்டப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை முதல்வர் அவர்கள் திறந்து வைக்கிறார்.

தொடர்ந்து பகல் 12 மணி அளவில் அழகப்பா பல்கலைக்கழக கூட்ட அரங்கில் முதலமைச்சர் அவர்கள் சிறப்புரை ஆற்றுகிறார். மாலை 5 மணி அளவில் காரைக்குடி பி.எல்.பி. பேலஸில் கழக நிர்வாகிகளை சந்தித்து கட்சி பணிகள் குறித்து ஆலோசனை நடத்துகிறார். அன்றிரவு காரைக்குடியில் தங்குகிறார்.

நாளை மறுதினம் (ஜன. 22 - புதன்கிழமை) காலை 9 மணி அளவில் காரைக்குடியில் இருந்து கார்மூலமாக புறப்பட்டு குன்றக்குடி, திருப்பத்தூர் புறவழிச்சாலை, அரளிக்கோட்டை, ஒக்கூர், வழியாக சிவகங்கைக்கு செல்கிறார். முதல்வர் அவர்களை குன்றக்குடி, திருப்பத்தூர் புறவழிச்சாலை, அரளிக்கோட்டை, ஒக்கூர் ஆகிய ஊர்களில் அந்தந்த பகுதி ஒன்றிய, பேரூர் மாவட்டக் கழக நிர்வாகிகள் வரவேற்கிறார்கள். சிவகங்கை நகரில் நகரக் கழகத்தின் சார்பில் வரவேற்பு தரப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து சிவகங்கை மன்னர் அரசு கல்லூரி மைதானத்தில் நடைபெறும் விழாவில் மாவட்ட அளவில் 50,000 நபர்களுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். அதனைத் தொடர்ந்து முடிவுற்ற திட்டங்களை துவங்கி வைத்தும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் விழா பேருரை ஆற்றுகிறார்.

முதல்வரை வரவேற்பதற்காக மாவட்ட எல்லையான நச்சான்துபட்டியில் இருந்து திருப்புவனம் புறவழிச்சாலை வரை இருபுறமும் சுமார் 100,கீ.மீட்டர் தூரம் வரை கழக வண்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. விழா நடைபெறும் மேடை சிறப்பாக பிரம்மாண்டமான முறையில் பந்தல் சிவா மேற்பார்வையில் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டச் செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் ஆகியோர் முதல்வரின் வருகை நிகழ்ச்சிகளை பார்வையிட்டு விரிவான ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள்.

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் அமைச்சர் முன்னாள் மு.தென்னவன் ஆலோசனையின் பேரில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் முதல்வரை வரவேற்பதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள்.